/ நகல் /

சுருக்கம்

தொழில் நுட்பக் கல்வித் துறை - தேர்வு வாரியம் - பட்டயத் தேர்வுகள் - தேர்வு பணிகள் - தினப்படி மற்றும் தேர்வூதியங்களை முன்பணமாக பெற்று உடனடிப் பட்டுவாடா (spot payment) முறையில் 2001 ஏப்ரல் தேர்வு முதல் வழங்குதல் - ஆணை வழங்கப்படுகிறது.

---

உயர் கல்வி (பி1)த் துறை

அரசாணை (நிலை) எண் 154 நாள் : 04.04.2001.

படிக்கப்பட்டவை: –

1. அரசாணை எண். 961 கல்வி அறிவியல் மற்றும், தொழில் நுட்பவியல் துறை, நாள் : 21.12.95.
2. அரசாணை எண். 417, உயர் கல்வித் துறை, நாள் : 17.08.98.
3. தொழில் நுட்பக் கல்வி கூடுதல் இயக்குநர் (பொ), கடிதம் எண். 69535 / ப்பி3 / 2000, நாள் : 12.10.2000 & 14.12.2000.

-------

ஆணை: -

தொழில் நுட்பக் கல்வி இயக்கக தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் பட்டயத் தேர்வுகளில் தேர்வுப் பணியாற்றும் பணியாளர்களுக்கு தினப்படி மற்றும் தேர்வூதியங்கள் மேலே படிக்கப்பட்ட அரசாணைகளின்படி வழங்கப்பட்டு வருகின்றன.

2. அப்பட்டயத் தேர்வுகள் சார்ந்த மைய மதிப்பீட்டுப் பணியைப் பொறுத்தவரையில் மைய மதிப்பீடு பணி முடிவடைந்தவுடன் தேர்வூதியம், பயணப்படி மற்றும் தினப்படி ஆகியவை மதிப்பீடு மையங்களிலேயே உடனடிப் பட்டுவாடா (spot payment) முறை மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

3. தேர்வுப் பணிகளைப் பொறுத்தவரையிலும் கூட மேலே பத்தி இரண்டில் குறிப்பிட்டுள்ள உடனடிப் பட்டுவாடா (spot payment) முறையே அமுலாக்குவது வேலைப் பளுவைக் குறைத்து, நிர்வாகத் திறனையும் மேம்படுத்தி விரைந்து தேர்வுப் பணி நிறைவேற வகை செய்யும் என தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் செய்துள்ள பரிந்துரையை அரசு ஏற்கிறது. அதன்படி, தொழில் நுட்பக் கல்வித் துறையின் தேர்வுப் பிரிவு நடத்தி வரும் பட்டயத் தேர்வுகளைச் செயல்படுத்தும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வரும் ஏப்ரல் 2001 வாரியத் தேர்வு முதல் உடனடிப் பட்டுவாடா (spot payment) முறையில் தேவையான தொகைகளை உரிய செலவுத் தலைப்பின் கீழ் முன் பணமாக (advance) பெற்று பயணப்படி தினப்படி மற்றும் தேர்வூதியம் ஆகியவற்றை வழங்கும் முறையை பின்வருமாறு செயல்படுத்த அரசு ஏற்பளிக்கிறது:-

(1) செய்முறைத் தேர்வுப் பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அவர்களிடம் இருந்து வரையறுக்கப்பட்ட படிவத்தில் விவரங்கள் பெற்று <u>அவர்கள் பணிபுரியும் பயில்க முதல்வர்கள் மூலம்</u> தேர்வுப்பணி முடிந்தவுடன் பயிலகங்களிலேயே தினப்படி (daily allowance) மற்றும் செய்முறைத் தேர்வு ஊதியமும் வழங்கலாம்:

(11) எழுத்து முறைத் தேர்வுகளைப் பொறுத்த மட்டிலும் தேர்வு முடிந்தவுடன் அந்தந்த தேர்வு மையத்திலேயே முதன்மைக் கண்காணிப்பாளர் மூலம் அவர்கள் பணி செய்த நாட்களுக்குரிய தேர்வூதியம் மற்றும் தினப்படி வழங்கலாம்.

4. புதிய நடைமுறையின் கீழும் இதற்கான செலவினம் பின்வருமாறு செலவுத் தலைப்பின்கீழ் தொடர்ந்து பற்று வைக்கப்படும்.

*2203. Technical Education-108. Examinations-*
*1.Non plan --AA/ (Conduct of Examinations - 04.*
*Travel Expenses (2203.00.108. AA. 0414)*
*05. Office Expenses (2) Other Contingencies,*
*(2203.00.108.AA.0521).33 Payment for*
*Professional & special services (2) Remuneration*
*(2203.00.108 AA 3322)*

1. இவ்வாணை நிதித் துறையின் 16.03.2001 நாளிட்ட அ.சா.கு.எண் **2164** / Edn.I / 2001-1இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒம்/- இ.வி. மணிவண்ணன்,
அரசு செயலாளர்.

பெறுநர்:

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை - 25.
மாநில கணக்காய்வாளர், சென்னை 18/ 35
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை - 35.
இயக்குநர், கருவூலக் கணக்குத் துறை, சென்னை - 35.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ஒம்/- பிரிவு அலுவலர்

// உண்மை நகல் //